பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 25 (7—5—68) செவ்வாய் ★ வெளியூர்: சித்திரை 26 (8—5—68) புதன் [இதழ்: 270

பத்திரிகை உலகிலே
பரபரப்பான திருப்பம்!
ஜூன் முதல் வெளிவருகிறது!
'பூம்புகார்'
(மாதமிருமுறை)
சிறப்பாசிரியர்: மா. தங்கவேலர்
ஆசிரியர்: தேவ தாமஸ்
விவரங்களுக்கு:
நிர்வாகி, 'பூம்புகார்' திண்டுக்கல்-1

தமிழகத்தின் தொழில் வளம் பெருக அண்ணா காட்டும் ஆர்வம்!

ஜப்பான் தொழில் நிறுவனங்களுடன் பல்வேறு திட்டங்கள் குறித்துப் பேச்சு

சேலம் இரும்பாலைக்கான அந்நியச் செலாவணி பெறவும் வாய்ப்பு

டோக்கியோ, மே 6—

ஜப்பானில் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு இடங்களைப் பார்ப்பதுடன், 'தமிழ்நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்க ஜப்பானின் உதவியை எந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ள இயலும்' என்பதிலும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து பல்வேறு தொழில் நிறுவனங்களுடனும், தொழில் வல்லுநர்களுடனும் பேச்சு நடத்திவருகிறார்.

'நிச்மென்' என்னும் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் அண்ணா அவர்கள் இன்று பேச்சு நடத்தினர். 'யான்மார்' என்னும் டீசல் எஞ்சின்களைப் பொருத்திய இயந்திரப் படகுகள் மூலம் தமிழ்நாட்டில் மீன் பிடிக்கும் தொழிலை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு— வசதிகளைக் குறித்து அவர்கள் பேசினார்கள். இத்திட்டத்தில் ஜப்பானிய நிறுவனத்தின் பிரதிநிதிகள் மிகவும் ஆர்வம் காட்டினர்.

இத்திட்டம் தொடர்பாக, தமிழக வேளாண்மைத்துறையமைச்சர் மேற்கொண்டு ஜப்பானியப் பிரதிநிதிகளோடு பேச்சு நடத்துவார் என்று தெரிகிறது.

அண்ணாவிடம் தொழில் நிபுணர் ஆலோசனை

சேலம் இரும்பு குறித்தும் அண்ணா அவர்கள், ஜப்பானிய நிறுவனம் ஒன்றுடன் பேச்சு நடத்தினர்.

சேலம் இரும்புக் கனியை மேம்படுத்தவும், ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் சேலம் இரும்புத் தொழிற்சாலை நிறுவுவதற்கான அந்நியச் செலாவணியை ஈட்டவும் அண்ணாவிடம் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

'மருபெனி—ஐடியா கம்பெனி' என்னும் நிறுவனத்தின் பிரதிநிதிகள், இன்று மாலை அண்ணாவைச் சந்தித்து, சேலம் இரும்பு பற்றிய தங்கள் திட்டத்தைத் தெரிவித்தனர்.

அந்தத் திட்டத்தின்படி, சேலம் இரும்புத் தாதுவை ஜப்பானியர்கள் வாங்கிக்கொண்டு அதற்கான தொகையை அந்நியச் செலாவணியாகக் கொடுப்பார்கள்; அந்த அந்நியச் செலாவணி, பிறகு, சேலம் இரும்புத் தொழிற்சாலை நிறுவப் பயன்படும்.

சேலம் இரும்புத் தொழிற்சாலை அமைப்புக்கான இறுதிக் கட்டத் திட்டமல்ல, இது; திட்டத்திற்கான வாய்ப்பு—வசதி பற்றிய துவக்கக் கட்டமாகவே இந்த பேச்சு நடைபெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தை பற்றி அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அந்நியச் செலாவணி மத்திய அரசைப் பொறுத்த விவகாரம். தமிழக அரசு விற்கும் இரும்புத் தாதுவின் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணியை சேலம் இரும்பாலை அமைப்புக்காகவே ஒதுக்குவது என்பது மத்திய அரசால்தான் முடிவு செய்யப்பட வேண்டும்; எனினும், இந்தத் திட்டத்தை மத்திய அரசின் பரிசிலனைக்கு அனுப்பிவைக்கப் போகிறேன்."

வணிக நிறுவனங்களுடன் உரையாடினர்

அண்ணா அவர்கள், தமது ஜப்பான் சுற்றுப்பயணத்தின் முதல் நாளான இன்று முழுவதும் டோக்கியோவில் ஒரு சுற்றுப் பயணி போலவே பல இடங்களையும் கண்டு களித்தார்.

இடையிடையே கொஞ்சம் பொழுதை, ஜப்பானிய வணிக நிறுவனங்களுடன் பேசுவதில் கழித்தார்.

பிற்பகலில் கோகுசாய் அரங்கில் ஒரு படக் காட்சியைக் கண்டு களித்தார்; அந்தப் படக்காட்சி மிகவும் சிறப்பாக இருந்ததாகப் பாராட்டினர்.

ஜப்பானின் பண்டை நாட்டிய முறைகளும், அவர்களின், நிதானமான நடைமுறை நிகழ்ச்சிகளும் அண்ணாவுக்குப் பிடித்திருந்தன.

கேரள மக்களின் இந்தி எதிர்ப்பு

டெல்லிக்கு உணர்த்த நடவடிக்கை

திருவனந்தபுரம், மே 7—

"தென் மாநிலங்கள்மீது இந்தி திணிக்கப்படுவதை, கேரளமும் வன்மையாகக் கண்டிக்கிறது; இதை, மற்ற மாநிலங்களின் எதிர்ப்புக் குழுக்களுக்கு அறிவித்திருக்கிறோம்.

"கேரளத்தில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

"கேரள மக்களின் இந்தி எதிர்ப்பை டெல்லிக்கு உணர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்"

என்று, கேரள இந்தி எதிர்ப்புக் குழுத் தலைவர் எம். என். பரமேசுவரன் பிள்ளை கூறியிருக்கிறார்.

கேரள இந்தி எதிர்ப்புக் குழு, அண்மையில் திருவனந்தபுரத்தில் துவங்கப்பட்டது; இக்குழுவில் வழக்குரைஞர்களும், பல முக்கியப் பிரமுகர்களும் இடம் பெற்றுள்ளனர்.

அறிஞர் அண்ணா சென்னை திரும்பும் நாள்

சென்னை, மே 7—

தற்போது ஜப்பானில் சுற்றுப் பயணம் செய்துவரும் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், மே 12-ம் நாள் சென்னை திரும்பக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருவேளை, சுற்றுப்பயணம் மேலும் ஒரு நாள் நீடிக்க நேரிட்டால், மே 13-ம் நாள் சென்னை வந்து சேருவார்கள்.

சென்னையில், அண்ணா அவர்கட்கு மகத்தான வரவேற்பளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மே 14-ம் நாள் சென்னையில் மாபெரும் வரவேற்புப் பொதுக் கூட்டம் நடைபெறும்.

காஞ்சியில் வரவேற்பு

மே 13-ம் நாள் அண்ணாவின் சொந்த ஊரான காஞ்சிபுரத்தில் மகத்தான வரவேற்பு அளிக்கப்படும்.

காஞ்சி நகராட்சி சார்பிலும் வரவேற்பு அளிக்க ஏற்பாடாகியிருப்பதாகத் தெரிகிறது.

மதுவிலக்கில் மத்திய அரசும் பின்வாங்குகிறது

நாடு முழுவதும் ஒரே கொள்கையை வற்புறுத்த முடியாதாம்

மாநிலங்கட்கு இழப்பீடு தரவும் இயலாதாம்

புதுடில்லி, மே 6—

"நாடு முழுவதிலும் ஒரே மாதிரியான மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்துவது என்பது மத்திய அரசினால் இயலக்கூடியதல்ல"

என்று, சமுதாய நலத்துறை அமைச்சர் திரு. அசோக் மேத்தா தெளிவாகச் சொல்லிவிட்டார்.

நாடாளுமன்ற மக்களவையில் கேள்விகட்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மதுவிலக்கு முற்றிலும் மாநில அரசுகளைப் பொறுத்ததாகும். இதில் மத்திய அரசு தலையிட்டுக் கட்டளையிடக்கூடிய நிலையில் இல்லை. எனவே இதில் மத்திய அரசு எதுவும் செய்ய இயலாது."

"மதுவிலக்கைச் செயல்படுத்துவதில் அரசு தோல்வி கண்டுவிட்டது"

என்று பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிக் கண்டித்தனர்; இதற்கு அமைச்சர் பதிலளிக்கையில்,

"ஒவ்வொரு மாநிலமும் வெவ்வேறு கொள்கையைக் கடைபிடிப்பதனால் இதில் சிக்கல் ஏற்படுகிறது"

என்றார்.

"மதுவிலக்கைச் செயல்படுத்த ஒப்புக்கொண்டுள்ள மாநிலங்கள்கூட இப்போது, 'தங்கள் வருமானம் குறைந்துவிடுமே' என அஞ்சி, செயல்படுத்தத் தயங்குகின்றன"

என்றும் அவர் கூறினர்.

"மதுவிலக்கினால் ஏற்படும் வருமான இழப்பை மத்திய அரசு ஈடு செய்ய இயலாது"

என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

உழவர் பேரணியின் கோரிக்கை மனு

தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பெற்றுக்கொண்டார்

சென்னை, மே 6—

இன்று வலதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உழவர் பேரணி சென்னை கோட்டைமுன் அணிவகுத்து வந்து கொடுத்த கோரிக்கைகள் அடங்கிய மனுவை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பெற்றுக்கொண்டு பேசுகையில், பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"உழவர் பெருமக்களான நீங்கள், கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் இவ்வளவு திரளாக, இந்தக் கோரிக்கை மனுவைக் கொடுப்பதற்காக வந்தது கண்டு பாராட்டுகிறேன்.

"உழவர் பெருமக்கள் நலனில் நமது முதலமைச்சர் அண்ணா அவர்கள் எந்த அளவுக்கு அக்கறை கொண்டவர்கள் என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம்.

"எனவே, உங்கள் கோரிக்கைகளை, அண்ணா அவர்கள் வந்ததும் எந்த அளவுக்கு—எந்த முறையில் செயல்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு, அந்த முறையில் செயல்படுத்துவது குறித்துப் பரிசீலிக்கப்படும்."

நம்நாடு

இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 25 (7—5—68) செவ்வாய்

காங்கிரசுக் கறுப்புக் கொடி — ஒரு பரீட்சார்த்தத் திட்டம்!

மக்களாட்சி முறையில், அமைச்சர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டுவது, பொதுவாகக் குடிமக்களுக்கும் குறிப்பாக எதிர்க் கட்சிகளுக்கும் உள்ள உரிமையாகும். ஆனால், கறுப்புக் கொடி காட்டத் தங்களுக்குள்ள உரிமையை, போதிய காரணமில்லாமல் பயன்படுத்துவது, அவ்வுரிமையைத் தவருகப் பயன்படுத்துவதேயாகும்.

இப்பொழுது சில நாட்களாக, கழக அமைச்சர்கள் செல்லுகின்ற சிற்சில ஊர்களில் அவர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டுவதில், அவ்வூர்களிலுள்ள காங்கிரசு அமைப்புக்களோ அல்லது காங்கிரசுக் கட்சியினரோ தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். 'படி அரிசி எங்கே?'—'திரும்பிப் போ' என்ற இரண்டு முழக்கங்களைத்தான், அமைச்சர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி பிடிக்கும் அந்தக் காங்கிரசுக் 'கர்மவீரர்'கள் முழங்குகின்றனர்!

காங்கிரசுக்காரர்கள் நிகழ்த்திவருகிற கறுப்புக் கொடி நிகழ்ச்சிகளைப் பொதுமக்கள் ஆதரிப்பதாக இல்லை. எந்தவிதக் காரணமுமில்லாமல், பதவி பறிக்கப்பட்டுப் போனதால் தங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற வயிற்றெரிச்சலைத் தீர்த்துக்கொள்ளுவதற்கே காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சிலர், இப்படி அமைச்சர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்ட முன்வந்துள்ளனர்—என்ற கருத்து, பொதுமக்களிடம் பரவலாக இருந்துவருகிறது. இதனாலேயே, காங்கிரசுக் கட்சியினரின் 'கறுப்புக் கொடி நாடக'த்துக்குப் பொதுமக்கள் ஆதரவு இல்லாமல் இருப்பதில் வியப்பில்லை அல்லவா?

அமைச்சர்களுக்கு எதிராகச் சிற்சில ஊர்களில் இதுவரை நடத்தப்பட்டுள்ள கறுப்புக் கொடி நாடகத்தைக் குறித்துச் செய்தியாளர்கள், தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் அவர்களை விளக்கம் கேட்டுள்ளனர். அதற்கு அந்தத் தலைவர் கூறிய விளக்கம், 'அவருடைய மறைமுகத் தூண்டுதல் காரணமாகத்தான், அமைச்சர்களுக்கு எதிராகக் காங்கிரசுக் கட்சியினர் அந்த நாடகத்தை மேற்கொண்டிருக்கின்றனர்' என்ற உண்மையை, உறுதி செய்வதாக அமைந்திருக்கிறது.

"இந்த ஆர்ப்பாட்டங்களைக் காங்கிரசுக் கட்சி நடத்தவில்லை"

என, தாம் கூறிய அளவுடன் சுப்பிரமணியம் நிறுத்திவிடவில்லை. அப்படித் தாம் நிறுத்திவிட்டால், 'அமைச்சர்களுக்கு எதிராகக் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏன் கறுப்புக் கொடி காட்டிவருகின்றனர்? அவர்களை ஏன் நீங்கள் தடுத்து நிறுத்தக்கூடாது? அவர்களை வெளிப்படையாகக் கண்டிப்பதுடன் அவர்கள்மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது? அவர்களைக் கண்டிக்கவும், கட்சியைவிட்டு வெளியேற்றவும் தங்களுக்கு அச்சமா?' என்றெல்லாம், கேள்விக் கணைகளால் தம்மைச் செய்தியாளர்கள் துளைத்துவிடத் தயங்கமாட்டார்களே என்ற உண்மையைத் தெரிந்திருக்கின்ற சுப்பிரமணியம், எப்படி அத்துடன் நிறுத்திவிடுவார்?

"ஏதோ சொந்தக் குறைகளுக்காகச் சில தனிப்பட்ட காங்கிரசுக்காரர்கள் இவ்விதம் செய்கின்றார்கள்"

என்று, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களின் கறுப்புக் கொடிக் 'கூத்து'க்கு, சுப்பிரமணியம் அவர்கள் விளக்கம் தந்திருக்கின்றார். இவ்வாறு கூறியதுடனாவது, தம் வாயை மூடிக்கொண்டாரா என்றால், அதுதான் இல்லை.

மேலும் நாவசைத்திருக்கின்றார். 'சொந்தக் குறைகளுக்காகத் தனிப்பட்ட காங்கிரசுக்காரர்கள் கறுப்புக் கொடி காட்டுகிறார்கள்' எனக் கூறிய காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம், அந்தத் தனிப்பட்ட காங்கிரசுக்காரர்களின் சிறு செயல், 'நியாயமானது' எனக் கூறவும் துணிந்திருக்கின்றார்.

"இந்த ஆர்ப்பாட்டங்களுக்குத் தகுந்த காரணம் இல்லை என்று துரதிருஷ்டவசமாக என்னால் கூறுவதற்கில்லை."

இது, தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் அவர்களின் விளக்கவுரையாகும்.

என்ன பொருள் இதற்கு? அவர் குறிப்பிட்டதைப்போல், தனிப்பட்ட காங்கிரசுக்காரர்கள் அமைச்சர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டிவருவதற்குத் **'தகுந்த காரணம் இல்லாமல் இல்லை'**—அதாவது, **'கறுப்புக் கொடி காட்டுவதற்குத் தகுந்த காரணம் இருக்கிறது'** என்கின்றார் சுப்பிரமணியம்!

தனிப்பட்ட காங்கிரசுக்காரர்கள் அமைச்சர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டிவருவதற்கு, **'தகுந்த காரணம் இருக்கிறது'** என்ற தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் அவர்களின் கூற்றை, வாதத்திற்காக நாம் அப்படியே ஒப்புக்கொள்கிறோம். அவருடைய இக்கூற்றிலிருந்து எழக்கூடிய நியாயமான கேள்விக்குப் பதில் தரவேண்டிய கடமை அவருக்கு இருக்கிறது.

'கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்களுக்குத் தகுந்த காரணம் இருக்கத்தான் செய்கிறது' எனக் கூறத் துணிந்தவர்; 'தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் சார்பில் அமைச்சர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டவேண்டும்' எனத் தீர்மானம் நிறைவேற்றி, தம் தலைமையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளத் துணிவதுதானே முறையாகும்? இதைச் செய்யாது, சுப்பிரமணியம் அவர்கள், 'தக்க காரணம் இருக்கிறது' எனக் கூறிக்கொண்டு, தனிப்பட்ட காங்கிரசுக்காரர்களின் விருப்பு வெறுப்புக்கேற்ப கறுப்புக் கொடி காட்ட, சுப்பிரமணியம் ஏற்றுள்ள தலைமைப் பதவிக்குப் பொருத்தமானதாக இல்லையே!

அமைச்சர்கள் கருணாநிதி அவர்களும், கோவிந்தசாமி அவர்களும் கடலூர் சென்றிருந்தபொழுது, அவர்களுக்கு எதிராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் இந்தத் தேர்தலில் தோல்வி கண்டவருமான சீனிவாச படையாச்சி அவர்கள் தலைமையில், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சிலர் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்.

அமைச்சர் கோவிந்தசாமி அவர்களுக்கு, வேறு ஓர் ஊரில், முன்னாள் சட்டமன்றத் துணைத் தலைவராக இருந்து தேர்தலில் தோல்வியைத் தழுவிக்கொண்ட வழக்குரைஞர் பார்த்தசாரதி நாயுடு அவர்கள், சில காங்கிரசுக்காரர்களுடன் 'கறுப்புக் கொடி நாடகம்' நடத்தியுள்ளார்.

இவ்விரண்டு காங்கிரசுப் பெரும் புள்ளிகளுக்கு, மேலே குறிப்பிட்டிருக்கின்ற இரண்டு அமைச்சர்களிடம் தனிப்பட்ட முறையில் இருக்கக்கூடிய குறைபாடு என்ன என்பதற்கு, காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் அவர்கள்தான் விளக்கம் தரவேண்டும்.

காங்கிரசுக் கட்சியினரின் கறுப்புக் கொடி நாடகத்தின் உண்மை வரலாறு என்ன தெரியுமா? இரண்டு திங்களுக்கு முன்னர் காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு காங்கிரசு செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில், 'கழக அமைச்சர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டவேண்டும்' என்ற தீர்மானம் உறுப்பினர் ஒருவரால் கொண்டுவரப்பட்டது. அத்தீர்மானம், அக்குழுவில் நிறைவேற்றப்படவில்லை என்றாலும், 'அமைச்சர்கள் போகின்ற ஊர்களிலுள்ள காங்கிரசுக் கட்சியினர், தம்மிச்சையாகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளலாம்' எனக் கருத்தறிவிக்கப்பட்டது. அதற்கு ஏற்பவே கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை ஆங்காங்கே இருக்கின்ற காங்கிரசுக் கட்சியினர் மேற்கொண்டிருக்கின்றனர்.

இப்படி, ஆங்காங்கே இருக்கக்கூடிய காங்கிரசுக்காரர்கள் மேற்கொண்டிருக்கின்ற கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்துக்கு மக்களின் ஆதரவு சிறிதளவுக்காவது கிடைத்திடக்கூடுமானால், அதற்குப் பின்னர், கறுப்புக் கொடி காட்டுவதை தமிழ்நாடு காங்கிரசுக் குழு ஒப்புக்கொண்டு, அதைச் செயலாற்றலாம் என்பதே சுப்பிரமணியம் அவர்களின் முடிவாகும்.

காங்கிரசு உதிரிகள் மேற்கொண்டிருக்கின்ற கறுப்புக் கொடி நாடகத்துக்குப் பொதுமக்கள் ஆதரவு கிட்டாமல்போகும்பட்சத்தில், 'தனிப்பட்ட காங்கிரசுக்காரர்கள் செய்த ஆர்ப்பாட்டங்களாகும்' என, இப்பொழுது கூறியுள்ள விளக்கத்தை அப்பொழுது கூறிக்கொள்ளலாம் என்பதும் அவருடைய முடிவு.

எனவேதான், கறுப்புக் கொடிபற்றி, முழு அளவு உடன்பாடு கூடுமாறும், அதே நேரத்தில் அந்த ஆர்ப்பாட்டத்தை உதறித் தள்ளிவிடாமலும், அதற்குப் பொதுமக்களின் ஆதரவை மறைமுகமாகக் கோருகின்ற முறையிலும், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் குதர்க்கம் பேசியுள்ளார்!

காங்கிரசுத் தலைவரின் கருத்துப்படி, தனிப்பட்ட காங்கிரசுக்காரர்கள் மேற்கொண்டிருக்கின்ற கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்,

ஒரு பரீட்சார்த்த அரசியல் எதிர்ப்புத் திட்டமாகும்!

—கா. க.

மனிதகுல மாணிக்கம் மார்ட்டின் லூதர் கிங்

நிறவெறி கொண்ட கொடியவனால் படுகொலைக்காளான நீக்ரோ மக்களின் தலைவர் திரு. மார்ட்டின் லூதர் கிங் பற்றி, இந்தியாவில் அமெரிக்கத் தூதுவராக உள்ள திரு. செஸ்டர் பௌல்ஸ் எழுதியுள்ள கட்டுரை இங்கு தரப்படுகிறது:—

நம் காலத்தின் மாபெரும் தலைவர்களில் ஒருவர், மார்ட்டின் லூதர் கிங் (ஜூனியர்). அவர் மறைவு குறித்து அமெரிக்கா முழுவதும் ஒரு நாள் துக்கம் காத்தது; அரசாங்கப் பதவி எதுவும் வகிக்காமல் இத்தகைய சிறப்புப் பெறும் முதல் தனி அமெரிக்கக் குடிமகன் இவரேயாவார்.

1956-ல் நான் டாக்டர் கிங் அவர்களைச் சந்தித்தேன்; நீக்ரோ அமெரிக்கர்களுக்குச் சமவுரிமையும், நீதியும் வாய்ப்பும் பெறும் முதல் அறப்போரில் அவர் அப்போது ஈடுபட்டிருந்தார். உள்ளூர் நிகழ்ச்சி ஒன்றின் விளைவாகத் தோன்றியது இந்த இயக்கம்; அலபாமா மாநிலத்தில் நடைபெற்ற பஸ் பயண மறுப்புத்தான் இதற்கு வித்து; இது ஒரு தேசிய உரிமைப் போராக வளர்ந்தது.

திருமதி ரோசர் பார்க்ஸ் என்று ஒரு நீக்ரோப் பெண்மணி; துணிகள் தைப்பது அவரது தொழில்; அமைதியானவர்; பஸ்ஸில் அவர் பயணம் செய்யும்போதெல்லாம், வெள்ளையர் வந்தால் எழுந்து நின்று கொண்டு தமது இடத்தைக் கொடுக்க வேண்டியிருந்தது.

ஆனால் ஒரு நாள் அவர், திடீரென்று, 'இருக்கையிலிருந்து நகருவதில்லை' என்று முடிவு செய்தார்; போலீசைக் கூப்பிடப் போவதாக பஸ் ஓட்டுநர் பயமுறுத்தவே, 'அப்படியே செய்யுங்கள்' என்று அந்த அம்மையார் சொல்லிவிட்டார்.

திருமதி பார்க்ஸ் கைது செய்யப்பட்டார். நகரம் முழுவதிலும் ஒரு நாள் பஸ் புறக்கணிப்பு நடத்துமாறு மார்ட்டின் லூதர் கிங் அழைத்தார்; அப்போது அவருக்கு வயது 25; ஒரு பாதிரியாராகப் பணியாற்றி வந்தார், வெள்ளைத் தீவிரவாதிகள் கடுமையாக எதிர்க்கவே, நீக்ரோக்களின் இயக்கம் வளர்ந்து வலுவடைந்தது; நகர் பஸ் போக்குவரத்து முழுவதையுமே அது பாதித்தது; அநேகமாக மாண்ட்கோமரி நகரிலுள்ள எல்லா நீக்ரோக் குடும்பங்களும் இந்த அறப்போரில் ஈடுபட்டனர்.

காந்தி வழி

இந்தியாவுக்கு அந்நிய ஆட்சியினின்றும் இறுதியாக விடுதலை தேடித் தந்த காந்தியின் வாழ்க்கையில் இந்த இயக்கத்தைத் தோற்றுவித்த தீப்பொறி, 1893-ல் இன—வேற்றுமை பாராட்டும் தென் ஆப்பிரிக்காவில் எங்கோ ஓர் ஊரில்—ஓர் இரயிலில் பிறந்தது.

தென் ஆப்பிரிக்காவில் முதன் முறையாக ஒருநாள் இரவு காந்தியடிகள், பயணம் செய்கையில், வெள்ளையர்களுக்கு என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இரயில் பெட்டியிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டார்கள்; அவர் மறுக்கவே, அடுத்த நிலையத்தில் அவரை இரயிலிலிருந்து வெளியே தள்ளிவிட்டார்கள்.

மையிருளில் குளிரில் மகாத்மா காந்தி நடுங்கிக் கொண்டிருக்க—அவருடைய குளிர்த் தடுப்பு அங்கியும் சாமான்களும் இருந்த இரயில், கடுகிச் சென்று மறைந்து விட்டது காந்தியின் மனத்தில் ஒரு கேள்வி எழுந்தது; என் உரிமைகளுக்காக நான் இங்கேயே யிருந்து போராடுவதா அல்லது இந்தியாவுக்குத் திரும்பிப் போய் விடுவதா?' என்ற முடிவான கேள்விதான் அது?

இந்தியாவுக்குத் திரும்பி ஓடுவது கோழைத்தனமாகும் என்று நான் முடிவு கட்டினேன்; என்ன வந்தாலும், எது சரியோ அதைத் துணிந்து செய்வதே நேரிய வழி என்று தீர்மானித்தேன் என்று காந்தியடிகள் நினைவு கூறுகிறார்.

வெற்றிக்கு அடிப்படை

காந்தியார் உள்பட மார்ட்டின் லூதர் கிங்கும் அவரைச் சேர்ந்தவர்களும் அடிக்கடி ஒன்றை வலியுறுத்தி வந்துள்ளனர்; 'அநீதியை எதிர்த்துப் போராடும் அறவழியின் வெற்றிக்கு முக்கிய நிபந்தனை, அது, மக்களால் நடத்தப்படும் ஒரு சட்ட நெறி முறைக்கு உட்பட்டு நடக்கவேண்டும்' என்பதே. இவர்கள் உண்மையிலேயே சனநாயகக் கொள்கையில் நம்பிக்கையுள்ளவர்களாகவும், பெருமளவு பேச்சுரிமையும், பத்திரிகைச் சுதந்தரமும் அளிப்பவர்களாகவும் இருக்கவேண்டும்.

'மனிதனுக்கு இயல்பாகவே மாண்பு உண்டு' என்னும் கருத்து அமெரிக்க நாட்டு உரிமைகள் சாசனத்தில் ஆழவே ஊன்றியுள்ளது; எனினும், மிகப் பெருமளவுக்கு மக்கள் சட்டங்களை மதித்து நடக்கும் நாடுகளில்கூட, நேரடி அனுபவம் ஒரு உண்மையை உணர்த்தியுள்ளது; 'நெடுங்காலமாக நிலவிவரும் தவறான கருத்துக்கள்—உணர்ச்சிகள்பற்றிய சட்டங்கள்—தர்ம நியாயப்படி சரியானவையே என்று மிகப் பெரும்பாலான மக்கள் ஒப்புக்கொள்ள முற்படும்போதுதான், அவற்றிற்கு மக்கள் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள்' என்பதே அது.

"மக்கள் உணர்ச்சியே எல்லாம். மக்கள் சரி என உணர்ந்தால் எதுவும் தோல்வியடையாது; இல்லையெனில், எதுவும் வெற்றி பெறாது. எனவே, சட்டங்களை இயற்றுவோர் அல்லது தீர்ப்புக்களை வழங்குவோரைக் காட்டிலும், பொதுமக்கள் உணர்ச்சியை உருவாக்குவோருக்கு அதிகச் சிறப்பிடம் உண்டு. இவர்கள்தான் சட்டங்களையும், தீர்ப்புக்களையும் செயலில் நிறைவேற்றுவதைச் சாத்தியமாக்குகிறார்கள்" என்று ஒரு சமயம் ஆபிரகாம் லிங்கன் கூறினார்.

நியாயம் கூறி, மாறுதல் ஏற்படுத்தும் அகிம்சை வழி—இந்தியாவில், அமெரிக்காவில் அல்லது வேறு எங்குமாகட்டும் — சட்டத்தை மதித்து நடக்கும் கண்ணியமுள்ள மக்களில் மிகப் பெரும்பாலோரின் மனச்சாட்சியை எழுப்பி, இந்தப் பெரும்பான்மையோர் தமது எண்ணங்களுக்கு ஏற்பச் செயல்கள் புரியுமாறு தூண்டுவதையே நோக்கமாகக் கொண்டது.

மக்கள் குலத்துக்கு இன்று மிக மிகத் தேவைப்படும் சகிப்புணர்ச்சி — நம்பிக்கை—சகோதரத்துவம் ஆகியவை ஓங்குவது உறுதி; ஏனெனில், காந்தியார், மார்ட்டின் லூதர் கிங் போன்ற தலைவர்களின் துணிச்சலும், தலைமையும் வீணாவதில்லை.

காந்தியார் இன்னும் வாழ்கிறார்! இவ்வாறே டாக்டர் கிங் அவர்களும் வாழ்கிறார்!

நகரையே உருமாற்றத் திட்டமிடுகின்றனர்!

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் தலைநகரமான, பான் உருமாறி வருகிறது!

வானத்தை முட்டுவது போன்ற கட்டிடங்கள் பல கட்டப்பட்டுவருகின்றன!

பூமிக்குள் பாதாளத் திரைப்படக் கொட்டகைகள் அமைக்கப்படும்!

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் 'மான்ஹாட்டன்' பகுதியில் அமைந்துள்ள நெடிதுயர்ந்த கட்டிடங்களைப்போல், பான் நகரிலும் கட்டி, நகரையே உருமாற்றத் திட்டமிட்டிருக்கிறார்கள்!

கழகத் தொழிற் சங்கச் சாதனை

சு. துரைசாமியின் முயற்சி வெற்றி

கோவை அடுத்துள்ள வட மதுரை கோத்தாரி 'பி' மில்லில் சுமார் 100 தொழிலாளர்கள் மூன்று ஆண்டுகளாக 'அப்ரண்டிசு'த் தொழிலாளிகளாகப் பணியாற்றிவந்தனர். இது சம்பந்தமாக ஆலை நிர்வாகத்தினரிடம் தி. ப. தொ. மு. சங்கம் தொலைபேசி மூலமும் கடிதத்தின் மூலமும் தொடர்பு கொண்டதன் பலனாக கீழ்க்கண்ட பலன்கள் தொழிலாளர்களுக்குக் கிட்டியுள்ளது :—

மேற்படி தொழிலாளர்கள் ரூ 3.50 முதல் ரூ 4.50 வரை சம்பளம் பெற்றுவந்தார்கள். சங்க நடவடிக்கையின் பலனாக 1968-ம் ஆண்டு ஜுன்—ஜூலை மாதத்தில் 100 தொழிலாளர்களும் நிரந்தரம் செய்யப்படுவதோடு வேலைக்கு உண்டான 'டெசினேஷனு'ம், சம்பளமும் (ரூ 6 முதல் ரூ 8 வரை) பெறுவர்.

பிற தொழிற் சங்கத்தினர், மேற்படி தொழிலாளர்களுக்கு 1967-ம் ஆண்டு வேலைபார்த்த நாட்களுக்கு ஓய்வு லீவு கிடைக்காது என்று கூறிவந்தனர்.

முன்னேற்ற சங்கத்தின் சார்பில் 23—3—68 அன்று தொழிற்சாலை மேற்பார்வை ஆய்வ ளர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்படி தொழிலாளர்களுக்கு ஓய்வு லீவு கொடுப்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டு 1—4—68 முதல் 10 பேர்கள் வீதம் லீவு தரப்பட்டு வருகிறது.

மேலும் ஓய்வு லீவுக்குத் தரப்படும் தொகை ரூ 6,000-க்கு அதிகமாகும்.

சங்கம் தற்போது நல்லவளர்ச்சியடைந்து வருகிறது இந்தத் தொழிற் தகராறுக்குத் தீர்வுகாண்பதில் மில் நிர்வாகத்தின் சார்பில் நாகரத்தினமும், சங்கப் பொதுச் செயலாளர் சு. துரைசாமி எம்.எல் ஏ. அவர்களும் முயற்சி எடுத்துக்கொண்டனர்.

அனாதைச் சிறுவர்கட்குப் புகலிடம்

திருச்சி — திருப்பராய்த்துறையிலுள்ள இராமகிருஷ்ண குடில் என்னும் நிறுவனம் தமிழக அனாதைச் சிறுவர்களுக்கென்றே ஏற்பட்டுள்ள அறநிலையமாகும். அனாதைச் சிறுவர்களுக்காகவே இங்கு உயர்நிலைப்பள்ளிப் படிப்பு வரை பள்ளியும், படிப்பு முடிந்தபின் தொழிற் பயிற்சி பெற தொழிற் பயிற்சிசாலைகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

உணவு, உடை, இருப்பிடம் கல்வி, தொழிற் பயிற்சி முதலான யாவும் முற்றும இலவசம்.

இங்கு இப்பொழுது சுமார் 300 சிறுவர்கள்வரை புகலிடம் பெற்று வாழ்ந்து வருகிறார்கள்; மேற்கொண்டும் சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு வருகிறோம். ஆண்டு முழுவதும் எந்தச் சமயத்தில் அனாதைச் சிறுவர்கள் வந்தாலும் எடுத்துக் கொண்டுதானிருக்கிறோம். ஆனாலும், பள்ளியாண்டுப் பருவ காலமாகிய மே, ஜுன் மாதங்களில்தான் அதிகமான சிறுவர்கள் சேர நல்ல வாய்ப்பிருக்கிறது.

"தமிழகத்தில் தாய் தந்தை இருவருமேயில்லாத திக்கற்ற நிலையிலுள்ள அனாதைச் சிறுவர்களே இல்லை" என்ற நிலையை ஏற்படுத்த முயலும் இலட்சியத்தில் குடில் சேவை செய்து வருகிறது ஆகையால், தாய் தந்தை இருவருமேயில்லாத, திக்கற்ற நிலையிலுள்ள அனாதைச் சிறுவர்களை மட்டுமே (தாயோ, தந்தையோ யாரோருவர் இருந்தாலும் வேண்டாம்) 9 வயது முதல் 14 வயது வரையுலுள்ளவர்களாகவும், அவர்களுடைய படிப்பு நிலை 4-வது வகுப்பிலிருந்து உயர்நிலைப்பள்ளி படிப்பு வரை உள்ளவர்களாகவும், இவர்களை தமிழகத்தில் யார் கண்டாலும் அத்தகைய சிறுவர்களைப்பற்றி முழு விவரங்களுடன் முதலில் இங்கு விண்ணப்பம் அனுப்பி வைத்தால், அதற்கான பாரம் முதலானவை அனுப்பி வைக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது

உடனே நடைபெற வேண்டிய

இரண்டு தமிழ்ப் பணிகள்

தில்லிப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. சாலை இளந்திரையன் அவர்கள் தெரிவிப்பதாவது :—

"நமது தாய்மொழியைப் பாட மொழியாகவும், நீதி மன்ற மொழியாகவும் ஆக்கும் பணியில் தீவிரமாக முனைந்துள்ளோம்.

'எல்லாவற்றையும் தமிழில் கொண்டுவர முடியுமா, தமிழால் தரமுடியுமா?' என்னும் ஐயங்கள் ஒரு பக்கம் எழுந்து கொண்டு இருக்கின்றன. இந்த ஐயங்களை நமது ஆர்வமிக்க பேச்சுக்களால் மட்டுமே நீக்கிவிட முடியாது.

பல துறைகளிலும் புதுப் புதிய தமிழ் நூல்கள் உருவாக வேண்டும்; அவை, கூடியவரையில் பிறமொழிகளின் துணை இன்றியே அமைய முடியும் என்பதையும் நாம் மெய்ப்பிக்க வேண்டும்.

தவிரவும், தமிழில் உருவாகும் புதிய துறை நூல்கள் தமிழில் உள்ள சொற்களையே மிகுதியாகக் கொண்டிருந்தால்தான் தமிழர்கள் அவற்றை எளிதாகப் புரிந்து உள்வாங்கிக் கொள்ளுவார்கள்.

ஆதலால், முடிந்தவரை தமிழில் ஏற்கனவே உள்ள சொற்களையும் புதிதாக ஆக்கும் தமிழ்ச் சொற்களையுமே இத்துறைகளில் மிகுதியாகப் பயன்படுத்த வேண்டும்; தவிர்க்க முடியாத இடங்களில் மட்டுமே பிறமொழிச் சொற்களைக் கடன் பெறவேண்டும்.

இதற்குத் துணையாக, உடனடியாக இரண்டு பணிகள் நடந்தாக வேண்டும் :—

(1) தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வழக்கில் உள்ள தொழில் துறை, கலைத்துறைப் பழகுதமிழ்ச் சொற்களைத் திரட்டித் தொகுத்து வகைப்படுத்த வேண்டும்.

(2) தொல்காப்பியம் தொடங்கி நேற்றுவரை வெளி வந்துள்ள எல்லாத் தமிழ் நூல்களுக்கும் சொல் அகராதியும் சொல் அடைவும் தயாரிக்க வேண்டும்.

இந்த இரண்டு பணிகளும் நிறைவேறினால், நமக்குத் தெரியாத எவ்வளவோ சொற்கள் (புதிய துறைகளுக்குப் பயன்படக் கூடிய சொற்கள்) தமிழிலேயே இருப்பதை அறிவோம்; தேவையான புதிய தமிழ்ச் சொற்களை ஆக்கும் புதுப்புதிய வழிமுறைகளையும் அறிய வருவோம்."

தாம்பரத்தில் முழுநேரமருத்துவமனை

சென்னை, மே 6—

தாம்பரம் நகராட்சிமன்றம், தாம்பரத்தில் முழுநேர மருத்துவமனை அமைக்கத் திட்டமிட்டிருக்கிறது.

இதுவரையில் தாம்பரத்தில் பகுதிநேர மருத்துவமனையே இயங்கிவந்திருக்கிறது.

மக்களின் வசதிக்காகப் புதிய மருத்துவமனைக் கட்டிடப் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

போதுமான படுக்கை அறைகளைக்கொண்ட தாய்—சேய் நல வார்டு ஒன்றும் அண்மையில் ஆரம்பிக்ப்படும் என்று தாம்பரம் நகராட்சித் தனி அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

பாலாற்றிலிருந்து தண்ணீர்

மேற்கு தாம்பரம் மக்களுக்குத் தேவையான தண்ணீரைப் பாலாற்றிலிருந்து கொண்டுவந்து நகராட்சி மேல்மட்ட நீர்த் தேக்கங்களில் தேக்கிவைக்கப்பட்டு விநியோகம் செய்யும் பணி முடிவடைந்துவிட்டது.

கிழக்குத் தாம்பரம் மேல்மட்ட நீர்த் தேக்கங்கள் அமைக்கும் வேலைகள் முடிவடையும் நிலையில் இருக்கின்றன.

தில்லை வில்லாளனுக்கு இந்திரா காந்தி வாழ்த்தும் வரவேற்பும்

புதுடில்லி, ஏப். 29—

தமிழகத்திலிருந்து டெல்லி மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் வழக்கறிஞர் தில்லை வில்லாளன் அவர்களுக்கு, தலைமையமைச்சர் இந்திரா காந்தி வாழ்த்துக் கூறி வரவேற்றார்.

"புதிதாகத் தேர்ந்தெக்கப்பட்டுள்ள தங்களை நான் வரவேற்கின்றேன்.

"நாடாளுமன்றத்தில் பங்கு பெறும் கட்சிகள் கருத்து வேறுபாடுகள் கொண்டுள்ளன; ஆனால், அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து, தேசிய முறையில் கவனிக்கவேண்டிய பிரச்சினைகள் ஏராளம் உள்ளன. இவைகளுக்கு மேலாக நம் தாயகத்தின் ஒற்றுமையையும், ஒருமைப் பாட்டையும் வளர்க்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். இத்தகைய பிரச்சினைகளில் தங்களின் கூட்டு முயற்சியும், திட்டமிட்ட ஒத்துழைப்பும் அளிப்பீர்கள் என நம்புகிறேன்"

என்று திருமதி இந்திரா காந்தி கூறினார்.

இதற்குத் தோழர் தில்லை வில்லாளன் நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

தில்லையில் வழியனுப்பு

சிதம்பரம், ஏப். 27—

டெல்லி மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வழக்கறிஞர் தில்லைவில்லாளன் அவர்களுக்கு 24—4 68-ல், தி.மு கழகச் சார்பில்—தோழர் சக்ரவர்த்தி தலைமையில் பாராட்டும், தேனீர் விருந்தும் அளிக்கப்பட்டது

தோழர்கள் பொன். சொக்கலிங்கம், இராசாங்கம் எம்.எல்.ஏ, புலவர் ஆறுமுகம், வழக்கறிஞர்கள் தில்லை மறைமுதல்வன், ஏ. சி. வைத்திலிங்கம், சலிபபெருமாள் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். தில்லை வில்லாளன் நன்றி கூறினர்.

அன்று இரவு 10 மணியளவில், சிதம்பரம் புகை வண்டி நிலையத்தில் அனைத்துக் கட்சித் தோழர்கள் — வழக்கறிஞர்கள் — பொது மக்கள் ஏராளமாகக்கூடி வழியனுப்பினர்.

சென்னையில் வழியனுப்பு

சென்னையில் 25—4—68 இரவு 8 மணியளவில் டெல்லி செல்லும் கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸ் வண்டியில் பயணமான தில்லை வில்லாளன் அவர்களுக்கு அமைச்சர் முத்துசாமியும், மற்றும் சென்னை, சிதம்பரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த கழகத் தோழர்களும் வாழ்த்து கூறி வழியனுப்பி வைத்தனர்.

சென்னையிலிருந்து இதே வண்டியில் ஜி. ஏ. அப்பன் அவர்களும் வந்தார்; அவரையும் தோழர்கள் சிறப்பாக வழியனுப்பிவைத்தனர்.

டெல்லியில் வரவேற்பு :

டெல்லி ஏப் 27—

இங்கு புகைவண்டி நிலையத்தில், கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா. செழியன், மாயவன், சிட்டிபாபு, தெய்வீகன், துரைராஜ், அன்புச் செழியன், மற்றும் நண்பர்கள் மாலையிட்டு வரவேற்றனர்.

29—4—68 அன்று தோழர் தில்லை வில்லாளன், அவர்களை, டில்லி தி. மு க. தோழர்கள் கோதண்டபாணி, செங்கோடன். சின்னசாமி, சங்கர் மற்றும் நண்பர்கள் மாலையிட்டு வரவேற்றனர்.

தில்லைவில்லாளன், மாயவன், சுற்றுப்பயணம்

தோழர்கள் தில்லை வில்லாளன் எம்.பி., மாயவன் எம்.பி., ஆகியோர், கழக முன்னணித் தோழர்கள்—சட்டமன்ற உறுப்பினர்களுடன் சிதம்பரம், விருத்தாசலம் வட்டங்களில் மே 6-ம் நாள் முதல் 9-ம் நாள்வரை சுற்றுப்பயணம் செய்கின்றனர்.

முகவரி மாற்றம்

கூடலரசன்,
66, பாரதியார் தெரு,
மதுரை—10.

சீரணியால் உருவான வானொலி மன்றக் கட்டிடம்

கருப்படையான்பட்டியில் திறப்பு விழா

22—4—68 அன்று திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கருப்படையான்பட்டி கிராமத்தில், சீரணியினரால் கட்டப்பட்ட வானொலி மன்றக் கட்டிடத் திறப்பு விழா நடைபெற்றது.

திருவரங்குளம் ஆணையர் திரு. பெ. வேலாயுதம் தலைமை வகித்தார்; சட்டமன்ற உறுப்பினர் கே. வி. சுப்பையா பி.ஏ, கட்டிடத்தைத் திறந்து வைத்தார்; திருவரங்குளம் சீரணித் தலைவர் பெரியண்ணன், வானொலிப் பெட்டியை இயக்கி வைத்தார்; திரு. கே. வி. சுப்பையா அவர்கள், 20 பேர்களடங்கிய கிராம வானொலி மன்றத்தைத் துவக்கி வைத்தார். வானொலி மன்றத்திற்கு திரு. பழனியப்பன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சட்டமன்ற உறுப்பினரை கருப்படையான்பட்டி கிராம மக்கள் மீனாட்சியம்மன் கோவிலுக்கு அழைத்துச் சென்று மரியாதை செய்தனர். அம்மன் கோவிலுக்கு உடனடியாக மின்சார விளக்குப் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதாகச் சட்ட மன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

சீரணியினரால் அமைக்கப்பட்ட இவ்வானொலி மன்றக் கட்டிடத்தின் மதிப்பு ரூ. 1,000 மின்சாரம் பொருத்தப்பட்டு வானொலி இயங்குகிறது. 50 சீரணியினர் கிராம மக்கள் ஒத்துழைப்பைக் கொண்டு சிறந்த முறையில் வானொலி மன்றக் கட்டிடத்தை கட்டி முடித்தனர்.

ஆதனக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் வி. குமார் அனைவரையும் வரவேற்க—சட்டமன்ற உறுப்பினர், ஆணையர், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய சீரணித் தலைவர், கிராமநல ஊழியர் ஆகியோர், பேரறிஞர் அண்ணா துவக்கிய சீரணியின் அவசியத்தையும் நோக்கத்தையும் பற்றி எடுத்துக் கூறினர்.

அடியார்க்குமங்கலம் உயர்நிலைப் பள்ளியில் அண்ணா படத் திறப்பு

அடியார்க்குமங்கலம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் 22—4—68 அன்று நிகழ்ந்த இலக்கிய மன்ற ஆண்டு நிறைவுச் சிறப்புக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களின் படத்தை மருத்துவர் விசயராகவன் திறந்து வைத்தார்.

'பாட்டுத் திறமிக்கார் பாரதியாரா? பாரதிதாசனரா?' என நிகழ்ந்த பட்டி மன்றத்தில், 'பாட்டுத் திறமிக்கார் பாரதிதாசனரே' என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வர் கு. சிவமணி எம் ஏ.பி.டி. அவர்கள் நடுவராக இருந்தார்; பாரதியார் பற்றி கி. பழனிவேலர், சந்திரசேகரன், திருஞானசம்பந்தன் ஆகியோரும்; பாரதிதாசன் பற்றி த. சரவணன், இளஞ்சித்திரன், தியாகராசன் ஆகியோரும் பேசினர்.

தமிழகப் புலவர் குழு

திருவில்லிபுத்தூரில் கூடுகிறது

திருச்சி, மே 5—

தமிழகப் புலவர் குழுவின் 24-வது கூட்டம், இம்மாதம் 25, 26-ம் நாட்களில் திருவில்லிபுத்தூரில் நடைபெறுகிறது.

முதல் நாள் மாலை 6 மணிக்கு பென்னிங்டன் நூல்நிலையத்தின் எதிரில் புதிதாக அமைக்கும் பந்தரில் புலவர் பெருமக்களுக்கு நகர மக்கள் வரவேற்பு அளிப்பர். நகராட்சி மன்றமும் வரவேற்பு அளிக்க முடிவு செய்துள்ளது.

"அன்று நகர முழுவதும் தமிழ் விழாவாகக் காட்சியளிக்கும்" என அதன் அமைப்பாளர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அறிவிக்கிறார்.

உணவு விலைபோல் மற்றப் பண்டங்கள் விலை குறையாததேன் ?

நடவடிக்கை எடுக்கவேண்டியவர் வெறும் 'கவலை' தெரிவிக்கிறார்

ஆமதாபாத், மே 6 —

"உணவுத் தானியங்களின் விலைகள் எதிர்பார்த்தபடி குறைந்திருக்கின்றன; ஆனால், இன்றியமையாப் பிற பண்டங்களின் விலைகள் அதற்கேற்ற வகையில் குறையாதிருப்பது கவலை தரக்கூடிய ஒன்று"

என்று மத்திய உணவமைச்சர் திரு. ஜெகன்ஜீவன்ராம் இங்கு தெரிவித்தார்.

"உணவுத் தானியங்களின் விலைகள் மேலும் குறையாமல் இருப்பதற்குத் தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டியிருந்தது" என்றும் அவர் குறிப்பிட்டார்,

அனைத்திந்திய மூன்றும் வகுப்பு அஞ்சல ஊழியர்கள் சங்க 11-வது மாநாட்டைத் துவக்கி வைத்து அமைச்சர் ஜெகஜீவன்ராம் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

"உணவுத் தானியங்களின் விலை குறைந்ததும் வாழ்க்கைச் செலவு குறையவில்லை; இதற்குக் காரணம், மற்ற இன்றியமையாப் பண்டகளின் விலைகள் குறையாமல் இருப்பதேயாகும்.

உணவு விலை குறைந்த அளவுக்கு மற்றப் பொருள்களின் விலைகளும் குறையும் என்று நம்புகிறேன். அப்படிக் குறைந்தால்தான், இரண்டு வறட்சிகட்குப் பிறகு இந்த ஆண்டு கிடைத்துள்ள நல்ல மகசூலின் பயனை மக்கள் அனுபவிக்க முடியும்."

சேலம் நகராட்சி

பொருட்காட்சி பற்றி முடிவு

சேலம் நகராட்சிக் கூட்டம் 27-4-68 அன்று தலைவர் திரு. ஆர். இராமகிருட்டினன் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம், வரும் ஆகஸ்டுத் திங்களில் நடக்கவிருக்கும் அனைத்திந்தியக் கதர்—கைத்தொழில் சுதேசி பொருட்காட்சியை நடத்தும் உரிமையை ஏலத்தில் விடலாமென முடிவு செய்யப்பட்டது.

பாவடித் தெரு, கன்னடியர் மடம் தெருக்களில் அமைந்துள்ள குடிதண்ணீர்க் குழாய்களை நாட்டாண்மை திரு. நா. வைபாபுரி தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் கே. செயராமன் பி ஏ. அவர்களைக் கொண்டு திறக்கலாமென்றும், விழாச் செலவுகளை அப்பகுதி மக்கள் செய்துகொள்வதை அனுமதிக்கலாமென்றும், பி. எஸ். மாணிக்கம் (தி. மு. க.) கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியது.

மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேறியது.

திருப்பராய்த்துறை அனாதைஇல்லத்துக்கு ரூ.5000

இந்திரா காந்தி நன்கொடை

நேரு அவர்சள் தலைமையமைச்சராக இருந்த சமயம்—1959-ம் ஆண்டில், இராமகிருஷ்ண குடில் தமிழக அனாதைச் சிறுவர்களுக்குச் செய்து வரும் பணியைப் பாராட்டி ரூ. 5,000 நன்கொடை அனுப்பிவைத்திருந்தார்கள். அதே அடிப்படையில் இப்போது தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்களும் ரூ. 5,000 நன்கொடை அனுப்பிவைத்து வாழ்த்தியுள்ளார்.

திருச்சி — திருப்பராய்த்துறையிலுள்ள இராமகிருஷ்ண குடில் என்னும் அற நிலையம், தமிழக அனாதைச் சிறுவர்களுக்காகவே தொண்டு செய்து வருவதைத் தமிழகம் நன்கு அறியும். சுமார் 300 மாணவர்களுக்கு மேல் புகலிடம் பெற்று, முற்றும் இலவசமாகக் கல்விப் பயிற்சியும், தொழிற் பயிற்சியும் தொடர்ந்து பெற்று வந்துகொண்டிருக்கிறார்கள். மேற்கொண்டும் அத்தகைய நிலையிலுள்ள சிறுவர்கள் வர வர இடமில்லையெனக் கூறாமல் சேர்த்துக் கொள்ளப்பட்டும் வருகிறார்கள்.

அய்யனுபுரத்தில் காங்கிரசுக் காலிகள் வெறியாட்டம்

கழகத் தோழர் தாக்கப்பட்டார் --- கொலை செய்யவும் முயற்சி

இராமநாதபுரம் மாவட்ட அய்யனுபுரத்தில் தி. மு. க. ஊழியரும் ஊராட்சிமன்ற உறுப்பினரும் விவசாயச் சங்கச் செயலாளருமான பி. பழனிச்சாமியை, 28-4-68 காலை 7-மணியளவில் முத்தையாத் தேவர் என்பவர் சுற்றிச் சுற்றி வளைத்து கடுமையாகத் தாக்கி, கட்டியிருந்த வேட்டியையும் உருவி ஓட ஓட விரட்டி அடித்தார்.

பின்பு கத்தியையெடுத்துக் கொலை செய்ய எத்தனிக்கும் போது, தோழர் பழனிச்சாமி தப்பி ஓடிவிட்டார்.

பின்பு, காங்கிரசுக் குண்டர்கள் எனப்படும் கு. முத்தையா, வ. பழனியாண்டி, மா. வெள்ளைச்சாமி, கருப்பையா ஆகியோரும், மற்றும் பலரும் சேர்ந்து அண்ணாவையும், மற்றும் அமைச்சர்களையும், கழகத் தலைவர்களையும் இழிவாகப் பேசிக்கொண்டும், 'தி. மு. க.-காரன் எவனைக்கண்டாலும் வெட்டுங்கடா' என்று தரக்குறைவான வார்த்தைகளைப் பேசிக்கொண்டும் தெற்குத் தெரு வீதியில் கட்டியிருந்த கழகக் கொடியை இறக்கிக் கிழித்துத் தீ வைத்துக் கொளுத்தினர்.

அந்தக் கம்பத்தில் கட்டியிருந்த கிளைத் தேர்தல் விளம்பரப் போர்டுகளைக்கிழித்துக் கைகளில் வைத்திருந்த கம்பால் அடித்து நொறுக்கினர்.

மேற்கண்ட சம்பவத்தை மேல ராசகுலராமன் கிராம முனிசிப்பிடம் புகார் செய்யக் கழகத் தோழர்களான ப. பழனிச்சாமி, சா. முத்து. அ. பொன்னுச்சாமி ஆகியோர் சென்றபோது மேற்கண்ட காங்கிரசுக் குண்டர்களுடன் மேலும் பலர் கூட்டமாகச் சேர்ந்து 'வெட்டுங்கடா — குத்துங்கடா' என்று சத்தமிட்டுக்கொண்டு கழகத் தோழர்களைத் துரத்திக்கொண்டு வந்தனர்; கழகத் தோழர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

அதையடுத்து வடகரை போலீசில் புகார் செய்யச் சென்றபோது கன்னித்தேவன்பட்டிக்கும்—கோபாலபுரத்திற்கும் இடையில் காங்கிரசுக் காலிகள் வழிமறித்தனர்; தப்பியோட முயலுகையில், கற்களை வீசியெறிந்தனர்.

வடகரை, பஸ் வசதி இல்லாத ஊராதலாலும், ஆள் நடமாட்டம் அதிகமாக இல்லாத பகுதியாதலாலும், 'எதிரிகளால் தாக்கப்படுவோம்' எனக் கருதி வடகரை போலீசில் புகார் செய்யப் போக முடியவில்லை.

வ. பழனியாண்டியா பிள்ளை, மா. வெள்ளைச்சாமி பிள்ளை, ஆகிய இருவரும் பெரும் பணக்காரர்களாதலால் வேண்டிய பணச் செலவுடன் கழகத் தோழர்களை மீண்டும் தாக்கக் கூலிப்பட்டாளங்களைத் தயாராக வைத்திருக்கின்றனர். எந்த நேரத்திலும் கழகத் தோழர்களுக்குப் பேராபயம் ஏற்படக்கூடும் என்கிற பதட்ட நிலை இருந்து வருகிறது.

இந்தக் குண்டர்களின் இழிசெயல் குறித்துக் கண்டனம் தெரிவிக்காத பொதுமக்களே இல்லை.

"ஏற்கனவே கழகத்தோழர்கள் ப. பழனிச்சாமி, சி கிருஷ்ணன் மா. சுப்பையா, அ. பொன்னுச்சாமி ஆகியோரை கடந்த பங்குனி 18-ம் நாள், 'கொலை செய்யப்படுவீர்கள்' என ப பழனியாண்டியா பிள்ளையால் எழுதப்பட்ட கடிதம் வடகரை போலீசில் தாக்கல் செய்யப்பட்டு, போலீசார் எதிரியைக் கண்டித்து சமரசம் செய்து வைத்தனர்; இதைத் தொடர்ந்து தான் இந்தப் பயங்கர நிலைமைகள் உருவாகி இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது" என்று செயலாளர் சு. பொன்னுசாமி அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

9--5--68

வாரணவாசி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: பழனிசாமி; பேசுவோர்: நன்னிலம் நடராசன், கோ. சிவப்பெருமாள், சி. நாகராசன், பிச்சைமுத்து, வேலுசாமி, வேலாயுதம், எம். ஆர். செல்லப்பா, வேலாயுதம், ந. தமிழ்மொழி, மற்றும் பலர்.

திருவரங்கம்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கீழவாசலில்; தலைவர்: அ. சண்முகம்; பேசுவோர்: ஆர். நாகசுந்தரம் எம். எல்.ஏ., எஸ். நெடுமாறன், எஸ். எம். வி. சாமி, மு. நடராசன். (முருகுபாண்டியன் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

சென்னை 34-வது வட்டம்

சென்னை மாவட்ட சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு நியூ பேரன்சு சாலையில் (பி.அண்டுசி. ஆலைக்கு அருகில்); தலைவர்: மா. மு. கிருஷ்ணசாமி; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, எஸ். இராகவானந்தம் எம்.எல்.சி., ஆர். டி. அரசு, மணிமொழி, டி. நடராசன் எம்.சி, க. சண்முகசுந்தரம் பி.ஏ., ஆ. கோ. குலோத்துங்கன், சாரா.

மதுவிலக்கில் மத்திய அரசும்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'மத்திய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலாவது மதுவிலக்கைச் செயல்படுத்த மத்திய அரசு முன்வராதது ஏன்?"

என்று, திரு. கன்வர்லால் குப்தா என்னும் உறுப்பினர் கேட்டார்.

"அதற்கு இடையூறாக, பொருளாதாரச் சிக்கலும் வேறு பல சிக்கல்களும் இருந்துவருகின்றன"

என்று பதிலளித்தார் அசோக் மேத்தா.

திரு. டி. விசுவநாதனும் மற்றும் சில உறுப்பினர்களும் கேட்ட கேள்விகளுக்கு திரு. மேத்தா பதிலளிக்கையில் கூறியதாவது:—

"மதுவிலக்குத் தொடர்பாக அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளைச் செயல்படுத்துமாறு மாநிலங்களுக்கு மத்திய அரசு தொடர்ந்து எடுத்துச்சொல்லி வந்திருக்கிறது; ஆனால் மாநில அரசுகளும், மாநிலச் சட்டமன்றங்களும் செய்யும் முடிவுகளில் மத்திய அரசு தலையிடுவதற்கில்லை."

மத்திய அரசின் நிர்வாகத்திலாவது மதுவிலக்கு உண்டா?

செ. கந்தப்பன் கேள்விக்கு அசோக் மேத்தா மழுப்பல்!

புதுடில்லி, மே 6—

"புதுவை போன்ற மத்திய அரசின் நேரடி ஆளுகையில் உள்ள பகுதிகளில் மதுவிலக்குச் செயல்படுத்தப்படுமா?"

என்று, கழக உறுப்பினர் செ. கந்தப்பன், நாடாளுமன்றத்தில் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அசோக் மேத்தா ஏதேதோ சொல்லி மழுப்பியிருக்கிறார்.

'மதுவிலக்குக் கொள்கையில் மாநில அரசு செய்யும் முடிவுகளில் மத்திய அரசு தலையிட முடியாது' என்றும், ஆனால், 'தொடர்ந்து தக்க அறிவுரை கூறலாம்' என்றும் அமைச்சர் அசோக் மேத்தா கூறியதையடுத்து தோழர் கந்தப்பன் பின்வருமாறு கேட்டார்:—

"மத்திய அரசு தனது நேரடி ஆளுகையில் உள்ள புதுவை போன்ற பகுதிகளிலேயே மதுவிலக்கைச் செயல்படுத்த முன்வராதிருக்கும்போது, மாநிலங்களுக்கு அறிவுரை வழங்க என்ன தகுதியிருக்கிறது? தனது நேரடி ஆட்சியில் உள்ள பகுதிகளிலாவது உடனடியாக மதுவிலக்கைச் செயல்படுத்த மத்திய அரசு முன்வருமா?"

அமைச்சர்:—"மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகளில் படிப்படியாக மதுவிலக்குச் செயல்படுத்தப்படுகிறது; வருமான இழப்பு ஏற்படும் எனபதால் முழுமையாகச் செயல்படுத்துவதில் சிரமம் ஏற்படுகிறது."

குழுக் கூட்டம்

சென்னை 10-வது வட்டம்

சென்னை 10-வது வட்டக் கழக உறுப்பினர்கள் மற்றும் சார்பு மன்றங்கள், படிப்பகங்கள் வட்ட முக்கிய தோழர்கள் அடங்கிய கூட்டம் 11—5—68 இரவு 7-மணிக்கு தோழர் அந்தோணி இல்லத்தில் (2, கிழக்குக் கல்லறைக் சாலை(நடைபெறும் என்று, வட்டத் துணைச் செயலாளர் ந. இராசமன்னர் அறிவிக்கிறார்.

நீத்தார் நினைவு நிகழ்ச்சி

சென்னை பூங்கா நகர்த் தொகுதிச் சீரணித் தலைவரும், சென்னை 42-வது வட்டக் கழகத் தோழருமான வ. மணிவண்ணனின் அண்ணியார் பேபி அம்மாள் கடந்த 21—4—68-ல் இயற்கையெய்தியதையடுத்து, 27—4—68 அன்று அவரது தங்கை இந்திராணி இயற்கையெய்திய துயரச் செய்தி மிகுந்த வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது. இருவரின் மறைவையும் முன்னிட்டு நீத்தார் நினைவு நாள் 7—5—68 அன்று அவதானம் பாப்பையர் தெரு, 110 என்னுள்ள இல்லத்தில் நடைபெறும்.

அண்ணாவுக்கு 'டாக்டர்' பட்டம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அளிக்கும் சிறப்பு

அண்ணாமலைநகர், மே 6—

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கட்கு 'டாக்டர்' பட்டம் அளிக்க அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முடிவு செய்துள்ளது.

தமிழகத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களில் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் ஒன்று. இப்பல்கலைக் கழகம், முதலமைச்சர் அண்ணா, இந்தியக் குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் ஆகிய இருவருக்கும் 'டாக்டர்' பட்டம் வழங்க முடிவு செய்துள்ளது.

இதற்கென்று சிறப்புப் பட்டமளிப்பு விழா நடைபெறவிருக்கிறது; இவ்விழா வருகின்ற ஜுலைத் திங்கள் 9, 10-ஆகிய நாட்களில் நடைபெறும்.

முருகு பாண்டியன்

கலை நிகழ்ச்சிகள்

மே 8: பாச்சூர்; 9: திருவரங்கம்; 10: தாராநல்லூர்; 11, 12: திருச்சி நகரம்; 14: திருப்பரங்குன்றம்; 15: நிலக்கோட்டை; 16: திருமயம்; 17: கீழக்காட்டூர்; 18: திருபந்துறை; 19: புத்தகரம்; 20: நிலத்துக்குடி; 21: ஒவர்ச்சேரி; 22, 23, 24: நாகை; 25: எடமலைப்பட்டி; 26: வேப்பர்பட்டி புதூர்; 27: செல்லம்பட்டி; 28: வையம்பட்டி; 29: மணப்பாறை; 30: செம்பியக்குடி.

அண்ணாவைக் கவர்ந்தன வானளாவிய குன்றுமணி மரங்கள்!

மூயிர்க் காடுகளில் சிறிதுநேரம் உலவினர்

சான் பிரான்சிஸ்கோ, மே 6—

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் இங்கு வந்திருந்த போது, கடந்த வியாழக்கிழமை காலை, காரில் மூயிர்க் காடுகளுக்குச் சென்றார். வானளாவி வளர்ந்திருந்த ஆனைக் குன்றுமணி மரங்களின் நிழலில் அவர் சிறிதுநேரம் உலவினர். அவருடன், இந்நகரிலுள்ள இந்திய கான்சல்-ஜெனரல் கே. எஸ். வாஜ்பாயும் சென்றிருந்தார்.

நகருக்கு வெளியிலுள்ள அரசாங்கப் பூங்காவிலிருக்கும் இந்தப் பெரிய பெரிய ஆனைக் குன்றுமணி மரங்கள் முதலமைச்சரைப் பெரிதும் கவர்ந்தன.

அன்பு தவழ்ந்தது-- பயனற்றுவிட்டது-- ஏமாற்றமடைந்தார்

ஹாவாய் செல்வதற்காக லாஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையத்தில் அண்ணா காத்திருக்கையில், பான் அமெரிக்கக் கம்பெனி ஊழியர் ஒருவர் முதல்வரிடம் வந்தார். இவர் ஒரு தமிழர்; வேலைக்குரிய வெண்ணிறச் சீருடை அணிந்திருந்தார்.

முதல்வர் தமது பயணத்தை ஒரு நாள் ஒத்திவைத்துவிட்டுத் தமது வீட்டில் வந்து ஒரு இரவாவது தங்க வேண்டுமென்று பிடிவாதமாக இவர் வற்புறுத்தினர்.

தம் சட்டைப் பையிலிருந்து ஒரு துண்டுக் காகிதத்தை அவர் வெளியே எடுத்தார்; அதில் முதல்வரது பெயரும், அவர் செல்லும் விமானத்தின் எண்ணும் குறிக்கப்பட்டிருந்தன.

தமது பெயர் முகம்மது உசேன் என்றும், காஞ்சிபுரத்திலுள்ள தமது சிற்றப்பா, முதல்வரின் நெருங்கிய நண்பர் என்றும் அவர் அறிமுகம் செய்துகொண்டார்.

காஞ்சிபுரம் நண்பர் பெயரைக் கேட்டதும் அவர் யார் என்பதைத் தமிழக முதல்வர் உடனே புரிந்துகொண்டார்.

ஆனால் அவரது பயணத்தை ஒத்திவைக்க முதல்வர் இணங்கவில்லை; இளைஞர் முகம்மது உசேன் பெரிதும் ஏமாற்றமடைந்தவராகக் காட்சியளித்தார்.

சவூதி அரேபியத் தமிழர்கள் மகிழ்ச்சி

தெஹ்ரான் விமான நிலையத்தில் அண்ணாவைச் சந்தித்தனர் --- அளவளாவி மகிழ்ந்தனர்

தெஹ்ரான், மே 6—

அண்ணா அவர்கள் அமெரிக்கா செல்லும் வழியில் சவூதி அரேபியாவிலுள்ள தெஹ்ரான் விமான நிலையத்தில் சிறிது நேரம் தங்கி, அங்கிருந்த தமிழர்களை மகிழ்வித்தார்.

"அண்ணா அவர்கள், விமான மூலம் தெஹ்ரான் நகரைக் கடந்து செல்கிறார்" என்ற செய்தி, பாஹ்ரீன் என்கிற இடத்திலுள்ள டாக்டர் முத்துசாமிக்குக் கிடைத்தது. தெஹ்ரான் விமான நிலையத்தில் பணிபுரியும் சந்திரன் என்கிற நபருக்கு இச்செயதியை டாக்டர் முத்துசாமி அறிவித்தார்.

ஏப்ரல் 15 திங்கட்கிழமை பிற்பகல் கிடைத்த இந்தச் செய்தியை, சந்திரன், பல இடங்களிலுமுள்ள தமிழ் நண்பர்களுக்குத் தொலைபேசி வாயிலாக அறிவித்தார்.

சில நிமிடங்களில், 'அண்ணா வருகிறார்' என்கிற செய்தி இங்கு வாழ்கின்ற தமிழர்களிடத்தில் பரவிவிட்டது.

திங்கள் இரவு பெரும்பாலான தமிழர்கள் தூங்கவே இல்லை; செவ்வாய் அதிகாலை 3 மணிக்கெல்லாம் விமான நிலையத்தில் தமிழர்கள் திரண்டுவிட்டனர்.

அண்ணா அவர்கள் பயணம் செய்த விமானம் அதிகாலை 3 மணிக்கு வந்திறங்கியது (இந்திய நேரப்படி காலை மணி 5-30); விமானம் நின்றிருக்கும் இடத்துக்கு எவரும் செல்ல முடியாது; ஆகவே மக்கள் அனைவரும் விமான நிலையத்தின் வெளித் தாழ்வாரத்தில் கூடியிருந்தார்கள்.

விமானத்திலிருந்த அண்ணா அவர்களுக்கு, விமானக் கம்பெனி ஊழியர் ஒருவர் மூலம் வெளியில் தமிழர்கள் காத்திருக்கும் செய்தி அறிவிக்கப்பட்டது.

அதிகாலை நேரமாயினும், அண்ணா அவர்கள் தனக்கே உரிய பெருந்தன்மையுடன் தமிழர்களுடைய அன்புக் கோரிக்கைக்கு இணங்கி, விமானத்திலிருந்து இறங்கிவந்து தமிழன்பர்களைச் சந்தித்தார். மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அண்ணா அவர்களுக்கு மலர் மாலைகள் சூட்டி தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

ஏறத்தாழ 15 நிமிடம் கலந்துரையாடிவிட்டு, நேரமாகிவிட்டதால் அண்ணா அவர்கள் அனைவரிடமும் விடைபெற்றுப் புறப்பட்டார்.

அமைச்சர்

மா. முத்துசாமி

சுற்றுப்பயணம்

ஏப். 8: மாலை 3-30 மணி: மோகனூர்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; மாலை 4 மணி: உயர்நிலைப் பள்ளி விழா; மாலை 6-30 மணி: நாமக்கல்—பேரூராட்சி மன்ற சமுதாயக் கூட அடிக்கல் நாட்டு விழா.

சென்னை நகர மக்களுக்கு ஒரு நற்செய்தி

சென்னை, மே 6—

"அடுத்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து (மே 12-ம் நாள்) நெல்லூர் பச்சரிசியின் விலையில் கிலோவுக்கு 5-காசு குறைக்கப்படும்.

"இப்போது கிலோ ரூ. 1.30-க்கு விற்கப்படுகிறது; அடுத்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து ரூ. 1.25-க்கு விற்கப்படும்"

என்று உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"இந்த அரிசிக்குத் தமிழக அரசு இப்போது கொடுத்துவரும் விலையின்படி கிலோவுக்கு இரண்டரை காசுதான் குறைக்கமுடியும் என்றபோதிலும், சென்னை நகரவாசிகள் நெல்லூர் அரிசியை விரும்புவதால், 5-காசு குறைப்பதென அரசு முடிவு செய்திருக்கிறது" என்று அமைச்சர் கூறினார்.

"நெல்லூர் அரிசிதான் வாங்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை; கிலோ 82 காசுக்கு விற்கப்படும் பச்சரிசியை வேண்டுமானாலும் கார்டுதாரர்கள் வாங்கலாம்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

"நெல்லூர் அரிசிதான் வாங்க வேண்டுமென்று யாராவது கட்டாயப்படுத்தப்பட்டால், அதை அரசின் கவனத்துக்குக் கொண்டுவரலாம்" என்று பொதுமக்களை சிவில் சப்ளை கமிஷனர் கே. திரவியம் கேட்டுக்கொண்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.